# கலைஞன் ஐ.எஸ். சண்முகநாதன்

நான் பிறந்த மண்ணில், எனது காலத்தில் அதிகமாகவும், உயர்வாகவும் பேசப்பட்ட பழம்பெரும் நாடகக் கலைஞர்களில் ஐ.எஸ். சண்முகநாதன் அவர்கள் மிக முக்கியமான ஒருவர். நாடகமே தன் வாழ்வாக வாழ்ந்து நடிப்பின் உச்சத்தைத் தொட்ட இந்தக் கலைஞனைக் காணும் போதெல்லாம் ஒரு விதமான வசீகரம் ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்று.

நிமிர்ந்த தோற்றம், ஆணழகனுக்குரிய உடற்கட்டு, சுருள் சுருளான பாகவதர் முடி, நாடக வசனம் போன்ற பேச்சு, ராஜநடை, நாடகத்திற்குரிய அங்க அசைவுகள், கணீரென்ற குரல்வளம் என்று எல்லாமே ஒருசேர்ந்த மாபெரும் கலைஞர் அவர்.

இவர் 15-11-1924இல் அரியாலையூர் சோமசுந்தரம் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனாகப் பிறந்தார். ஐ.எஸ். சண்முகநாதன் அவர்கள் தனது உயர்கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும், பட்டப்படிப்பை சென்னை பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டார். சிறந்த விளையாட்டு வீரரான இவர் உதைபந்தாட்டத்தில் பிரபலமான வீரராகத் திகழ்ந்தவர். யாழ் இந்துக்கல்லூரி உதைபந்தாட்டக் குழுவில் மட்டுமல்லாது சென்னை பல்கலைக் கழகத்தில் படிக்கும் நாட்களில் தமிழ்நாடு உதைபந்தாட்டக் குழுவிலும் அங்கம் வகித்தார்.

சென்னை பல்கலைக்கழகத்தில் பயிலும் காலத்தில் ஜெமினி கணேசனும் அங்கு படித்த காரணத்தால் ஜெமினி குடும்பத்துடன் மிக நெருங்கிப் பழகும் நண்பரானார். ஆயினும் ஜெமினி நடிகை சாவித்திரியை இரண்டாவது திருமணம் செய்த போது அவரின் உறவைத் துண்டித்துக் கொண்டார். அறுபதுகளில் ஒரு தென்னிந்தியத் திரைப்படத்தில் நடிக்க இவருக்குச் சந்தர்ப்பம் கிட்டியது. இதை அறிந்த இவரது தாயார் சென்னை வந்து வலுக்கட்டாயமாக யாழ்ப்பாணத்துக்கு இவரை அழைத்துச் சென்றுவிட்டார். ஜெமினி கணேசனின்

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

பாதிப்பு இவரிடம் காணப்பட்டதால் அக்காலத்தவர்கள் இவரை ஈழத்து ஜெமினி கணேசன் என்று புகழ்வதுண்டு.

இவருக்குப் புகழ் சேர்த்த நாடகக் கலையைப் பொறுத்தவரை தனது 16 வயதிலேயே அரியாலை சுதேசிய திருநாள் நாடகங்களில் நடிக்கத் தொடங்கிவிட்டார். இவர் நடித்த முதல் நாடகம் குந்தளப்பிரியா. இதில் இவர் வேடனாக வேடமேற்றிருந்தார். இந்நாடகத்தில் தம்பிராசா, விதானை சண்முகராஜா, இராமநாதன், தம்பாபிள்ளை மாஸ்டர், சிற்றம்பலம், கனகலிங்கம் ஆகியோரும் நடித்திருந்தனர்.

1941இல் சண்முகநாதன் அவர்கள் ஐயாத்துரை மாஸ்டருடன் இணைந்து சத்தியவாணி என்ற நாடகத்தில் நடித்தார். இதுவே அரியாலை மண்ணில் மேடையேற்றப்பட்ட முதல் சமூக நாடகமாகும்.

1942 ஆண்டு சுதேசிய விழாவில் மேடையேறிய சுபத்திரா அருச்சுனாவில் இவருடன் சபாபதி நடேசர், விதானை சண்முகராஜா, இராமநாதன், வே. தர்மலிங்கம், மு. சோம-



சுந்தரம் ஆகியோரும் நடித்திருந்தனர்.

1943இல் திரௌபதை வஸ்திராபரணம் என்ற நாடகத்தில் பங்கேற்றார். இந்நாடகத்தில் பிரபல நடிகரும் நெறியாளருமான சிவஞான போதம் அவர்கள் துரியோதனனாக நடித்திருந்தார்.

1944இல் நடைபெற்ற அரியாலை சுதேசிய விழாவில் வெள்ளிவிழாவின் போது அருச்சுனன் தபசு, பரசுராமர், வணிகநகர் வர்த்தகர், பிரகலாதன் ஆகிய நான்கு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இவற்றில் அருச்சுனன் தபசு, பரசுராமர் ஆகிய நாடகங்களில் ஐ.எஸ் பங்கு கொண்டார்.

இதன் பின்னர் மனோன்மனி, ஆரவல்லி, இரு சகோதரர்கள் போன்ற பல நாடகங்களில் பல்வேறு வேடங்கள் ஏற்றார். மனோன்மணி நாடகத்தில் எஸ்.ரி. அரசு, மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் ஆலாலசுந்தரம் ஆகியோரும் நடித்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பல வேடங்களை ஏற்று நடித்த ஐ.எஸ். சண்முகநாதன் அவர்கள் 1950க்குப் பின்னர் நாடகங்களில் பிரதான பாத்திரங்களில் நடித்து புகழின் உச்சிக்குச் சென்றார். மந்திரிக்குமாரி, வணங்காமுடி, ராஜராஜ சோழன், ஜெனோவா, அம்பிகாபதி போன்ற அவர் நடித்த நாடகங்கள் பற்றி இன்றும் பெரியவர்கள் சிலாகித்துப் பேசும் அளவுக்குச் சிறப்பாக அமைந்திருந்தன.

மந்திரிக்குமாரி என்ற சினிமாப் படம் அந்நாட்களில் மாதக் கணக்கில் திரையரங்குகளில் ஓடி வெற்றி நடைபோட்டது. அதனை நாடகமாக்கி அதில் நம்பியார் நடித்த ராஜகுரு பாத்திரத்தில் எமது மண்ணின் இன்னுமொரு சகாப்தமான இ.கே. குமரைய்யா அவர்களும், எஸ்.ஏ. நடராஜன் நடித்த பார்த்தீபன் பாத்திரத்தில் ஐ.எஸ். சண்முகநாதன் அவர்களும் நடித்திருந்தனர். இந்த மந்திரிக்குமாரி நாடகம் இவ்விருவரதும் அற்புதமான நடிப்பினால் திரைப்படத்தை விட சிறப்பாக இருந்ததாக எல்லோரும் புகழ்ந்தனர்.

ஐ.எஸ். அவர்கள் நடித்த அம்பிகாபதி என்ற ஒரேயொரு நாடகத்தை மட்டும் பார்க்கின்ற சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. 1966இல் எமது பிள்ளையார் ஆலய மேற்கு வீதியில் சுதேசிய விழாவின் பிரதான நாடகமாக அந்நாடகம் மேடையேறியது. அம்பிகாபதி நாடகத்தின் கடைசிக் காட்சி மட்டும் இன்றும் கண்முன்னே நிற்கிறது. கொலைத் தீர்ப்பிலிருந்து தப்புவதற்காக அம்பிகாபதி (கம்பனின் மகன்) 100 பாடல்கள் பாடுவதும், ஒவ்வொரு பாட்டின் முடிவில் காதலி அமராவதி (குலோத்துங்கன் மன்னனின் மகள்) ஒவ்வொரு பூவாக எண்ணி கீழே போடுகின்ற காட்சி. சற்றே சரிந்த குழலே என்று ஆரம்பிக்கும் கடைசிப் பாட்டு. காப்பையும் பாடலாக எண்ணியதால் எண்ணிக்கை பிழைத்துப் போக அம்பிகாபதிக்குத் தண்டனை நிறைவேற்றப்படும். மேடையில் இரு கூறுகளாக்கப்பட்ட அம்பிகாபதியின் உடல் கிடக்கும். ஐ.எஸ் அவர்களின் வாயசைப்பு, காதல் காட்சிகளில் அவரது வசீகரம், வீர வசனங்கள் எல்லாமே அபாரமாக இருந்தது.

இவர் நடித்த மந்திரிக்குமாரி, மற்றும் இவர் விமலாதித்தனாக நடித்த இராஜராஜசோழன் போன்ற நாடகங்கள் பல இடங்களில் மேடையேற்றப்பட்டு அரியாலை மண்ணுக்குப் புகழ் சேர்த்தன.

சுதேசிய விழாவின் பெரும்பாலான நாடகங்கள் அவர் பிறந்த வீட்டிலேயே பழக்கப்பட்டன. நாடக அலங்காரங்கள், உடைகள் போன்றவற்றை அந்த வீட்டில் நீண்ட காலமாக அவர் பாதுகாத்து வந்தார்.

சிறந்த கடவுள் பக்தரான இவர் பிள்ளையார் திருவிழா நாட்களில் எப்போதும் சுவாமியின் வாகனத்தைத் தொட்டபடி வருவார். வாகனத் தண்டு தூக்கியதால் ஏற்பட்ட தழும்பை இவரின் பின் கழுத்தில் காணலாம். எங்கள் வேட்டைத் திருவிழாவில் ஆடப்படும் வேட்டையை எமது இளைஞர்களுக்கு அவர் வீட்டில் வைத்துப் பழக்கியது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் உடற்பயிற்சி போதனாசிரியராகக் கடமை புரிந்த இவர் அநேகமான மெய்வல்லுனர்

**ஆழத்து முத்துக்கள் 61**

போட்டிகளில் போட்டி ஆரம்பிப்பாளராக பணியாற்றியுள்ளார்.

ஊரில் பல சமூக சேவைகளில் இவர் ஈடுபட்டார் தபாற்கட்டைச் சந்தியிலுள்ள அரியாலை மத்திய சந்தை மற்றும் அரியாலை மத்திய விளையாட்டு மைதானம் ஆகியவற்றின் உருவாக்கத்துக்காக உழைத்தவர்.

நான் பிறக்கும் முன்பே மகா நடிகனான ஐ.எஸ். சண்முகநாதன் அவர்களிடம் நாடக விடயங்களைக் கேட்டறிந்த சந்தர்ப்பமே ஒரு பெரு நாடக அனுபவமாக எனக்கு அமைந்து போனது. அந்த மாபெரும் கலைஞன் 01-10-1985 அன்று தனது 61 வயதில் அமரரானார். இவரது நாடக, சமூக சேவையை கௌரவிக்கும் முகமாக அரியாலை சரஸ்வதி நூல்நிலையத்தில் இவரது உருவப் படம் திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளது.



sriskandan@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.**

**இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**

*K.S. பாலச்சந்திரன்*